**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

E.P.No.04/2024

in

ARC.No.320/2022

தனலெட்சுமி சீனிவாசன் சிட்பண்ட்ஸ்,

மன்னார்குடி, அதற்காக அதன் சீட்டு நடத்துபவர்

..... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

// **எதிர்**//

1. சேரமணி

2. வளவன்கோதை ..... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய

நடுநிலைப்பள்ளி, தென்பாதி - 57. ..... 2 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.அறிவழகன், B.Sc., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தி.சத்தியசீலன், B.E, LL.B, M.A., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது பற்றுகை உத்தரவு (Pro Order) 2 வது எதிர்மனுதாரர் கார்னிஷியான தென்பாதி - 57, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தலைமை ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பி வைத்து உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 11-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இந்நிறைவேற்று மனு 2ம் எதிர்மனுதாரருக்கு சி.பி.சி. ஆர்டர் 21 ரூல் 48ன்படி நோட்டீஸ் அனுப்பி கேட்டும், மேற்படி அறிவிப்பை 2ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டபின் தொகை செலுத்தாவிடில் மேற்படி 2வது எதிர்மனுதாரர் தென்பாதி - 57, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முதுநிலை ஆசிரியராக பணிபுரிந்து பெறும் மாத ஊதியம் ரூ.8,632/- சிபிசி பிரிவு 60-ன்படி பிடித்தம் செய்யக்கூடாத தொகை ரூ.1,000/- போக மீத தொகை ரூ.7,632/-ல் 3 ல் 1 பங்கு தொகையான ரூ.2,544/- 2ம் எதிர்மனுதாரர் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்திட பற்றுகை உத்தரவு பிறப்பித்தும், மேற்படி பற்றுகை உத்தரவு (Pro Order) 2வது எதிர்மனுதாரர் கார்னிஷியான தென்பாதி - 57, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தலைமை ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பி வைத்து வரவு வைத்து வசூல் செய்து தர உத்தரவு பிறப்பிக்கக்கோரியும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

2ம் எதிர்மனுதாரருக்கு தனலெட்சுமி சீனிவாசன் சிட்பன்ட்ஸ் நிறுவனத்தில் எந்தவித சீட்டு நடவடிக்கைகளும் எப்போதும் இருந்ததில்லை. 1ம் எதிர்மனுதாரருக்காக பிணையதாரர். 1ம் எதிர்மனுதாரர் கடந்த 16.03.2025ம் தேதியில் இறந்துவிட்டார். அவருக்கு வாரிசுள் நல்லநிலையில் உள்ளனர். மேற்படி அவரது வாரிசுகள் மனுவில் அவசிய தரப்பினர்களாக சேர்க்க இதுவரை மனுதாரர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களுக்கு போதிய வசதிகளும் வாய்ப்புக்களும், அசையா சொத்துக்களும் உள்ளது.

1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் பாக்கி தொகையை செலுத்தி வைக்க கடமைப்பட்டவர்கள். அப்படி செலுத்தவில்லை என்றாலோ அல்லது தொகையை கைப்பற்ற வேறு வழிகள், வசதிகள் இல்லை என்றாலோ 2 ம் எதிர்மனுதாரருக்கு உள்ளது.

மேற்படி மனுதாரர் சீட்டு நிறுவன சட்டப்படி ஏல சீட்டுக்கள் நடத்தவில்லை என தெரிய வருகிறது. சீட்டு நிறுவன சட்டம் 1982-ன்படி, ஏல சீட்டுக்கள் நடத்த வேண்டுமானால் நிறுவனத்துக்கும், சீட்டு பங்கு உறுப்பினர்களுக்கும் இடையே சீட்டு ஒப்பந்தம் (FORM No.VIII – Chit Agreement) ஏற்பட்டிருக்க வேண்டும். இதுபற்றி பல தடவைகள் நகலை நேரிலும், மனுதாரர் வழக்கறிஞரிடமும் கேட்டும் இதுநாள்வரையில் கொடுக்காமல், சால்ஜவாப்புக்கள் சொல்லி, கடைசியாக தரமுடியாதென்று காலம் கடத்திவிட்டார்கள்.

அதன் பிறகு பதிவுத்தபால் அஞ்சலில் 1) திருவாரூர் நகரம், விஜயபுரம், No.32/1, தியாகராஜபுரம் தெருவில் இயங்கி வரும், மாவட்ட பதிவாளர் சீட்டுநிதி நிர்வாகம் (பதிவுத்துறை) அவர்களுக்கும் 2) மன்னார்குடி டவுன், நடேசன் தெரு, கனரா வங்கி மாடியில் இயங்கி வரும், தனலெட்சுமி சீனிவாசன் சிட்பண்ட்ஸ் மேலாளருக்கு (மனுதாரருக்கு) அவர்களுக்கும் மேல்கண்டபடி சீட்டு ஒப்பந்தம் (FORM No.VIII – Chit Agreement) சான்றிட்ட நகல் கேட்டு அவர்களும் இதுவரையில் எவ்வித பதிலும் தரவில்லை.

மனுதாரர் பதிவு செய்து சீட்டு நடந்திருந்தால், எவ்வித தயக்கமும் இல்லாமல் உடன் சான்றிட்ட நகல் கொடுத்திருக்க முடியும். அவசிய தரப்பினர்களாக வாரிசுகளையும் சேர்க்கவில்லை. அவர்களின் சொத்துக்களில் பற்று நடவடிக்கை எடுக்கவில்லை. சீட்டு ஒப்பந்தம் (FORM No.VIII – Chit Agreement) சான்றிட்ட நகலையும் கொடுக்கவில்லை.

எனவே 2ம் எதிர்மனுதாரரால் உரிய காலத்தில் ஆஜராகி, எதிருரையை தாக்கல் செய்து, அவரது கட்சியை மேல் நடத்த இயலவில்லை. எனவே தோன்றாத்தரப்பினராக ஒருதலைபட்ச உத்தரவான விவரம் தெரிந்து மேற்படி எதிருரையையும், செட்டடைசைடு மனுவும் தாக்கல் செய்துள்ளார்.

2ம் எதிர்மனுதாரர் வேண்டுமென்றோ, அல்லது அலட்சியமாகவோ இல்லை. வழக்கில் சட்ட தன்மை/பொருண்மை குறித்த (Question of Law and facts) தீர்வு செய்ய வேண்டி நல்ல கட்சியுள்ளது. ஒப்பந்த நகல் பெற்று கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆகையால், கடந்த 29.07.2025ம் தேதியில், தோன்றா தரப்பினராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை செட்டடைசைடு செய்து தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்று வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி 2ம் எதிர்மனுதாரர் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) தீர்வு:-**

**1.** மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலணை செய்கையில், 2ம் எதிர்மனுதாரரின் கார்னிஷிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி அவர்கள் தொகையினை செலுத்தி வைக்கவில்லை

என்பதை அறிய முடிகிறது. எனவே, அவரது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**4.** மேலும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து 2ம் எதிர்மனுதாரரின் கார்னிஷின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.2,500/- வீதம் 24 மாதத்திற்கு ரூ.60,000/- பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.2,257/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்து பற்றுகை உத்தரவு (Pro Order) 2ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பி வைக்க உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6) முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 2ம் எதிர்மனுதாரரின் கார்னிஷின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.2,500/- வீதம் 24 மாதத்திற்கு ரூ.60,000/- பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.2,257/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்து பற்றுகை உத்தரவை 2ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பி வைக்க உத்தரவிடுகிறது. For Pro order Batta call on 30.01.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.02 16:46:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>**

**<u>இருதரப்பிலும்</u>** : இல்லை

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.02 16:47:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

E.P.No.04/2024

in

ARC.No.320/2022

தனலெட்சுமி சீனிவாசன் சிட்பண்ட்ஸ், அதற்காக அதன் சீட்டு நடத்துபவர், கனரா வங்கி மாடி, 59/பி, நடேசன் தெரு, மன்னார்குடி டவுன், மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

.... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

// எதிர்//

1. திரு.சேரமணி, வயது 68, த/பெ.அருள்பிரகாசம், வசிப்பிடம் 20, எம்.ஜி.ஆர்.நகர், மன்னார்குடி டவுன் மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
2. திரு.வளவன் கோதை, வயது 50, த/பெ.சீனிவாசன், வசிப்பிடம் 4/818, கீழத் தெரு, கீழத்திருப்பாலக்குடி, மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

..... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

தலைமை ஆசிரியர் அவர்கள், ஊராட்சி ஒன்றிய நடு நிலைப்பள்ளி, தென்பாதி - 57.

..... 2 ம் எதிர்மனுதாரர் கார்னிஷி

இம்மனுவானது பற்றுகை உத்தரவு (Pro Order) 2 வது எதிர்மனுதாரர் கார்னிஷியான தென்பாதி - 57, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தலைமை ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பி வைத்து உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 11-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 22.08.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 22.08.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.அறிவழகன், B.Sc., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தி.சத்தியசீலன், B.E, LL.B, M.A., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை உத்தரவு**

01. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. 2ம் எதிர்மனுதாரரின் கார்னிஷின் சம்பளத்திலிருந்து மாதம் ரூ.2,500/- வீதம் 24 மாதத்திற்கு ரூ.60,000/- பிடித்தம் செய்தும், மீதத் தொகை ரூ.2,257/- கடைசி ஒரு மாதம் பிடித்தம் செய்து பற்றுகை உத்தரவை 2ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பி வைக்க உத்தரவிடுகிறது.

03. For Pro order Batta call on 30.01.2026.

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.02 16:47:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.